அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 03/2021

எனது இலக்கம் : CS/DOS/Policy/10

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.12.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 04/2020 இன் படி மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைகளின் கீழ் மாகாண பொதுச் சேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கேரிக்கைகளின்படி இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள பதவியொன்றுக்கு இடமாற்றம் செய்தல்**

மேற்படி விடயங்கள் தொடர்பாக, பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரின் PSC/ EST/06-05/03/2015 ஆம் இலக்க மற்றும் 2020.01.30 ஆந் திகதியிட்ட பொதுச் சேவை ஆணைக் குழுவின் 04/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் தொடர்புடையது.

02. இதன்படி மாகாண பொதுச் சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள பதவியொன்றுக்கான இடமாற்றம் கோரும் சந்தர்ப்பத்தில் இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பம் மாகாண பிரதம செலயலாளர் ஊடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்துடன் நிறுவனத் தலைவரால் சான்றளிக்கப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளையும், உரிய இணைப்புகளின் ஒழுங்கு வரிசைக்கு ஏற்ப தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

03. இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் பதவியொன்றுக்கு இடமாற்றத்திற்காக எதிர்பார்க்கப்படும் மாகாண பொதுச் சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் என்பதுடன், அது பற்றி இலங்கையில் செல்லுபடியாகும் சத்தியக்கடதாசிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும் (இணைப்பு 3 இன் படி) இணைப்பு 02 இல் தொடர் இலக்கம் 22ஆக சமர்ப்பிக்க வேண்டும்.

(i) இணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனம் கிடைத்தால், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் 04/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, நாட்டில் எந்தவொரு இடத்திலும் சேவை செய்ய இணங்குவதாகவும்

(ii) மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமிக்கப்பட்டுள்ள / பதவி உயர்வு பெற்றுள்ள தரத்திற்கு இணையான இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு அடிப்படையில் தற்போது உள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பின்னர் சேவை மூப்பு நிலையில் வைத்திருக்க இணங்குவதாகவும்

(iii) இணைந்த சேவைகளின் கீழ் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணத்திற்கு ஏற்ப, தரப்படுத்தல் தரம் உயர்வுகளுக்கு இணங்க தர உயர்வைத் தவிர, மாகாண பொதுச் சேவையில் பெற்றுக்கொண்டுள்ள தரப்படுத்தல் தரம் உயர்வுகளை கைவிட வேண்டி ஏற்பட்டால் அந்த தரம் உயர்வுகளை கைவிட இணங்குவதாகவும்

(iv) மாகாண பொதுச் சேவையில் பெற்றுக்கொண்டுள்ள சம்பளத்திற்கும் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமிக்கப்படும் தரத்திற்கு இணையான சம்பளத்திற்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இணை உத்தியோகத்தர் ஒருவர் பெறும் சம்பளத்தில் நிறுவுவதற்கு இணங்குவதாகவும்

04. இதன் போது உத்தியோகத்தர் இணைந்த சேவைகளின் கீழ் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பதவிக்கு நியமிக்கப்பட்டால், சேவை செய்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் சேவை நிலையம் தொடர்பாக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும், ஆனால் வெற்றிடம் தொடர்பான எந்த கடிதமும் சமர்ப்பிக்கப்படக்கூடாது. மேலும், எந்தவொரு நிறுவனத் தலைவரும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அறிவித்தல் இன்றி தனது நிறுவனத்தில் தற்போதுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள வெற்றிடத்திற்கு மாகாண பொதுச் சேவையில் உள்ள உத்தியோகத்தரை இணைத்துக்கொள்வது தொடர்பான பரிந்துரைகளை வழங்கக்கூடாது.

05. உத்தியோகத்தர் இணைந்த சேவைகளின் கீழ் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள பதவியொன்றில் சேவை செய்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் சேவை நிலையத்தில் வெற்றிடம் உள்ளதா என்பது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதுடன், நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அப்பதவிக்கு உத்தியோகத்தரை நியமிப்பது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த தீர்மானத்தின் அடிப்படையில், உத்தியோகத்தரை சம்பந்தப்பட்ட மாகாண பொதுச் சேவையிலிருந்து விடுவிப்பது / விடுவிக்காதது தொடர்பான நடவடிக்கைகள் குறித்த மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

06. இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உத்தியோகத்தரை இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பதவிக்கு நியமிக்க இணக்கம் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில், அந்த உத்தியோகத்தரை மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியை வழங்கினால், உத்தியோகத்தர் புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்வாங்கப்படுவார். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உத்தியோகத்தரை இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பதவிக்கு நியமிப்பதற்கு வெளியிடப்படும் இணக்கம் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

07. சம்பந்தப்பட்ட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன், அந்த உத்தியோகத்தர் உடனடியாக சம்பந்தப்பட்ட புதிய சேவை நிலையத்தில் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். கடமைகளை பொறுப்பேற்றதை சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தலைவரினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உள்ளீர்க்கப்பட்ட கடிதம் வெளியிடப்படும்.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

CS/DOS/Tr/PSC/04/2020

**மாகாண பொதுச் சேவையில் நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களை இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள பதவியொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல்**

(**பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின்** 04/2020 **ஆம் இலக்க சுற்றறிக்கை**)

**(மூலப்பிரதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**

## பகுதி 1 – உத்தியோகத்தரின் கோரிக்கை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | தனிப்பட்ட தகவல்கள் | | | | | |
| I | உத்தியோகத்தரின் முழுப்பெயர் | | | | | |
| Ii | முதலெழுத்துக்களுடன் பெயர் | | | | | |
| iii | பிறந்த திகதி | | | | | |
| iv | சேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | |
| v | நிரந்தர வதிவு | மாவட்டம்:- | | | | |
| | | பி.செ பிரிவு | | | | |
| vi | தற்காலிக வதிவு | மாவட்டம் :- | | | | |
| | | பி. செ பிரிவு | | | | |
| 02 | சேவை காலம் பற்றிய விவரம் | | | | | |
| i | சேவை நிலையம் | | | | | |
| | மாகாண அமைச்சு | | | | | |
| | மாகாண திணைக்களம் | | | | | |
| | நியமனத் திகதி | | | | | |
| ii | சேவை | | | | | |
| iii | பதவி | | | | | |
| iv | தரம் | | | | | |
| | தற்போது பெறும் சம்பளத்திற்குரிய குறியீட்டென் (03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி) | | | | | |
| | மாதாந்த சம்பளம் | | | | | |
| | சம்பள படிநலை | | | | | |
| v | நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா ( அடையாளத்தை இடவும்) | | ஆம் | | இல்லை | |
| | நிரந்தரமாக்கப்பட்ட திகதி | | | | | |
| | நியமனம் நிரந்தரமாக்கப்படவில்லையாயின் அதற்கான காரணம் | | | | | |
| vi | 1 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | | முழுமைப்படுத்திய திகதி | | | |
| | 2 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | | முழுமைப்படுத்திய திகதி | | | |
| | 3 ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | | முழுமைப்படுத்திய திகதி | | | |
| vii | இரண்டாம் மொழித் தேர்ச்சி முழுமைப்படுத்தப்பட்டுள்ளதா | | ஆம் | | இல்லை | |
| viii | தரப்படுத்தல் | தரம் II | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தரவுயர்வு | தரம் I | | | | |
| 03 | வேறு தகவல்கள் | | | | | |
| i | அரசாங்க சேவையில் நியமனம் பெற்று மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரா என்பது பற்றி | | ஆம் | | இல்லை | |
| ii | அவ்வாறாயின் விடுவிக்கப்பட்ட திகதி | | | | | |
| iii | மாகாண அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி | | | | | |
| 04 | இடமாற்றத்துடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் | | | | | |
| i | இடமாற்றம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் இடம் | அமைச்சு | | | | |
| | | திணைக்களம் | | | | |
| | | அலுவலகம் | | | | |
| | | வேறு | | | | |
| ii | இடமாற்றம் கோருவதற்கான காரணம் | | | | | |

அரசாசங்க சேவையில் உள்ள பதவியொன்றுக்கு இடமாற்றம் பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் அப்பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்ற நாள் முதல் இணைந்த சேவைகளின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கிறேன்.

................................ ...................................

திகதி கையொப்பம்

**பகுதி II -**

**<u>நிறுவனத் தலைவர்/திணைக்களத் தலைவர் / அமைச்சு செயலாளர் /</u>**

**...........................................<u>மாகாண தலைமைச் செயலாளரின் பரிந்துரை</u>**

<u>நிறுவனத் தலைவர்/ திணைக்களத் தலைவர் / அமைச்சு செயலாளரின் பரிந்துரை</u>

- மேற்படி உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.
- இந்த உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை /கணக்காய்வு விசாரணைகள் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2021 இல் இணைப்பு 02 இன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன என்பதை அன்புடன் அறியத்தருகிறேன்.

.................................. உத்தியோகத்தரை சேவையில் இருந்து விடுவிக்க பரிந்துரை செய்கிறேன்/ பரிந்துரை செய்யவில்லை.

................................. ..............................................................................

திகதி கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்

.......................................... மாகாண தலைமைச் செயலாளரின் பரிந்துரை

.................................. உத்தியோகத்தரின் கோரிக்கையின் பேரில் மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பதற்கு பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை.

................................. ..........................................................................

திகதி கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

**இணைப்பு 02**

| | |
|---|---|
| உத்தியோகத்தரின் முழுப் பெயர் | |
| உத்தியோகத்தரின் பெயர் (முதல் எழுத்துக்களுடன் | |

இணைப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இணைந்த சேவைகளின் கீழ் புதிய பதவியை ஏற்றுக்கொண்ட திகதி | :-............................................... | | | 1 |
| 2 | ................................. மாகாண பொது சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட திகதி | :-............................................... | | | 2 |
| 3 | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான முதல் நியமனத் திகதி | :-............................................... | | | 3 |
| 4 | முதல் நியமனத்திற்கு ஏற்ப கடமைகளைப் பொறுப்பேற்ற திகதி | ......................<br>.................... | | | 4 |
| (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இணைவதற்கு முன்னர் நீங்கள் வேறொரு பதவியில் சேவையாற்றியிருந்தால், அதனுடன் தொடர்புடைய நியமனக் கடிதங்கள் மற்றும் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கடிதங்களை 03A, 03B,... 04A, 04b, என இணைத்து சமர்ப்பிக்கவும்.) | | | | | |
| 5 | பிறப்புச் சான்றிதழ் | (உள்ளது /இல்லை) | | | 5 |
| 6 | தேசிய அடையாள அட்டை | (உள்ளது /இல்லை) | | | 6 |
| 7 | பெயரில் மாற்றம் இருப்பின் உறுதிமொழிப் பத்திரம் / திருத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் / திறைசேரி 394 கீழ் ஒப்புதல் | (உள்ளது /இல்லை) | | | 7 |
| 8 | மருத்துவ பரிசோதகர் அறிக்கை | (உள்ளது /இல்லை) | | | 8 |
| 9 | சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிமொழி | (உள்ளது /இல்லை) | | | 9 |
| 10 | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அறிக்கை | (உள்ளது /இல்லை) | | | 10 |
| 11 | ஒப்பந்தம் (பொது 160) | (உள்ளது /இல்லை) | | | 11 |
| 12 | இற்றைப்படுத்தப்பட்ட வரலாற்றுத்தாள் | (உள்ளது /இல்லை) | | | 12 |
| 13 | பட்ட சான்றிதழ் | (உள்ளது /இல்லை) | | | 13 |
| 13.1 | விரிவான பெறுபேற்றுக் குறிப்பு | (உள்ளது /இல்லை) | | | 13A |
| 13.2 | வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருந்தால், அது ப.மா.ஆணைக்குழுவினால் | (உள்ளது /இல்லை) | | | 13B |
| 13.3 | பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பை உறுதிப்படுத்தும் கடிதம் | (உள்ளது /இல்லை) | | | 13C |
| 14 | 1வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகள் | (உள்ளது /இல்லை) | | | 14 |
| 14.1 | 2வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகள் | (உள்ளது /இல்லை) | | | 14A |
| 14.2 | 3வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகள் | (உள்ளது /இல்லை) | | | 14B |

| | | | |
|---|---|---|---|
| 15 | நியமனத்தை உறுதிப்படுத்தும் கடிதம் | (உள்ளது /இல்லை) | 15 |
| 16 | இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளதை | (உள்ளது /இல்லை) | 16 |
| 17 | தரம் II க்கு தரம் உயர்வு கடிதம் | (உள்ளது /இல்லை)) | 17 |
| 17.1 | தரம் I க்கு தரம் உயர்வு கடிதம் | (உள்ளது /இல்லை)) | 17A |
| 17.2 | விசேட தரத்திற்கு தரம் உயர்வு கடிதம் | (உள்ளது /இல்லை) | 17B |
| 18 | ஒழுக்காற்று நடவடிக்கை<br>(தொடர்புடைய ஆவணங்கள் 18.1,18.2 ஆக இணைக்கப்பட வேண்டும்...) | (உள்ளது /இல்லை) | 18 |
| 19 | இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவித்தல்<br>(தொடர்புடைய ஆவணங்கள் 19.1,19.2 ஆக இணைக்கப்பட வேண்டும்...) | ......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை<br>......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை | 19 |
| 20 | வெளிநாட்டு விடுமுறை<br>(தொடர்புடைய ஆவணங்கள் 20.1,20.2 ஆக இணைக்கப்பட வேண்டும்...) | ......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை<br>......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை<br>......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை | 20 |
| 21 | சம்பளம் இல்லாத விடுமுறை விவரங்கள்<br>(தொடர்புடைய ஆவணங்கள் 21.1,21.2 ஆக இணைக்கப்பட வேண்டும்...) | ......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை<br>........................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை<br>......................ஆந் திகதியிலிருந்து<br>...................ஆந் திகதி வரை | 21 |
| 22 | பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 03/2021 இன் இணைப்பு 03 இன் படி உறுதிமொழிப் | (உள்ளது /இல்லை) | 22 |

| | | | |
|---|---|---|---|
| | சரிபார்த்து சமர்ப்பிக்கிறேன். | | |
| | விடயத்திற்கு பொறுப்பான | பெயர்:- | கையொப்பமும் திகதியும்:- |
| | சரியானது என்பதை உறுதி செய்கிறேன். | | |
| | நிறுவனத்தின் தலைவர் | கையொப்பமும் திகதியும்:- | உத்தியோகபூர்வ முத்திரை:- |

இணைப்பு 03

# <u>உறுதிமொழிப் பத்திரம்</u>

இங்கு கீழே கைச்சாத்திடும் ........................................................................ (முகவரி) என்ற முகவரியில் வதியும் ....................................................................... (பெயர்) ஆகிய நான் கௌரவத்துடனும், நேர்மையாகவும், உண்மையாகவும் பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தி சத்தியப் பிரமாணம் செய்து பிரகடனஞ்செய்கிறேன் /உறுதியளிக்கிறேன்.

1. மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உறுதிமொழி அளிப்பவர் நான் ஆவேன்.
2. நான் தற்போது ................................................ (மாகாணம்) மாகாண அரச சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக .................................................................. (சேவை நிலையம்) அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் சேவை செய்கின்றேன்.
3. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இணைந்த சேவைகளின் கீழ் வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு இடமாற்றம் பெறுவதற்கு நான் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் நான் இணைந்த சேவைகளின் கீழ் வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் 04/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இனங்க நாட்டின் எந்தவொரு சேவை நிலையத்திலும் சேவை செய்வதற்கு விருப்பம் என்பதையும்,
4. மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனம் செய்யப்பட்டுள்ள / பதவி உயர்த்தப்பட்டுள்ள தரத்திற்கேற்ப இணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு ஏற்ப தற்போது உள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பின்னர் சேவை மூப்பு நிலையில் வைக்க இணங்குவதாகவும்;
5. இணைந்த சேவைகளின் கீழ் வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப, தரப்படுத்தல் பதவி உயர்வுகளுக்கு அமைவான பதவி உயர்வைத் தவிற மாகாணப் பொதுச் சேவையில் பெற்றுக்கொண்டுள்ள தரப்படுத்தல் பதவி உயர்வுககளை கைவிட வேண்டி ஏற்படும் பட்சத்தில் அப்பதவி உயர்வுகளை கைவிடுவதற்கு இணங்குவதாகவும்,
6. மாகாண பொதுச் சேவையில் இருக்கும் போது பெற்ற சம்பளத்திற்கும், இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமிக்கப்படும் தரத்திற்கு இணையான சம்பளத்திற்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், இணைந்த சேவைகளின் கீழ் வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் சமமான உத்தியோகத்தர் ஒருவர் பெறும் சம்பளத்தில் நிறுவுவதற்கு இணங்குவதாகவும்,

இத்தால் சத்தியப்பிரமாணம் செய்து பிரகடனப்படுத்துகிறேன்/உறுதி அளிக்கிறேன்.

மேற்படி தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என்பதை சத்தியப்பிரமாணம் செய்து பிரகடனப்பபடுத்துகிறேன்/உறுதி அளிக்கிறேன்.

முத்திரை

பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்

இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் உண்மையானவை என ஒப்புக்கொண்டு 20.... ஆம் வருடம் ............. ஆம் மாதம் .......... ஆந் திகதி எனது முன்னிலையில் ......................................... (இடம்) இல் கைச்சாத்திடப்பட்டது

.................................................

சமாதான நீதவான்